மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், ஏற்கெனவே, திருநெல்வேலி செயற் பொறியாளர் அவர்கள் கேரளத்திலே உள்ள செயற் பொறியாளருடன் தொடர்பு கொண்டு இந்தப் பணி விஷயமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நம்முடைய தலைமை பொறியாளர் (பாசனம்) அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அந்த வகையில் இயன்ற அளவிற்கு இந்தப் பணிகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தப் பணிக்கான தொகையை தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது என்றும் அந்தப் பணியைச் செய்பவர்கள் கேரளத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தப் பணி முறையாக அந்த அதிகாரிகளால் செய்யப்படுகிறதா ? இல்லையா ? என்பதை கண்காணிக்க தமிழக அரசினுடைய அலுவலர்கள் அல்லது பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா ? இல்லை என்றால், அப்படி ஒரு குழுவை அமைத்து, ஆவன செய்ய தமிழக அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, பணி நடைபெற வேண்டிய இடம் கேரள எல்லையில் இருக்கிறது. ஆனால், பயன் கிடைப்பதோ, தமிழகத்தைச் சேர்ந்த பகுதிகள். அந்த முறையில் கேரள அரசின் அலுவலர்களை வைத்துத்தான் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. கேரளாவிலும் அரசு அங்கே நடந்துகொண்டிருக்கிறது—நமக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ, அதே அளவிற்கு பொறுப்பு கேரள அரசுக்கு இருக்கின்ற காரணத்தால், கேரள அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலர்களை நம்பித்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து அவ்வளவு சரியானதாக இல்லை என்று அரசு கருதுகிறது.

சித்தார் அணை கட்டும் திட்டம்.

260—(*வினா 18478)—திரு. பி. ஜி நாராயணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984 மார்ச் 14]

பெரியார் மாவட்டம் பவானி தொகுதியில் உள்ள வறட்சிப் பகுதிகள் பயன் பெறுகிற வகையில் அட்டவணைப் புதூரில் சித்தார் அணை அமைக்கும திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. பி. ஜி. நாராயணன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் பெற இருக்கிறது? இதற்கு எவ்வளவு ரூபாய் செலவிடப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, ஏறக்குறைய பவானி வட்டத்தில் 2,055 ஏக்கர் புஞ்சை நிலமும், 131 ஏக்கர் நஞ்சை நிலமும் பாசன வசதிபெறும் என்று கருதப் பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 200 லட்சம் ரூபாய் செலவாகும என்று இப்போது உத்தேசிக்கப்பட்டு இருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வராக நதி நீர்ப்பாசனத் திட்டம்.

261 (*வினா 19592)—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வராகநதி நீர்ப் பாசனத் திட்டத்திற்கு செய்யப்பட்ட செலவு எவ்வளவு ?

(ஆ) அத்திட்டம் சரிவர நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட வில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்குறைகளைச் சீர் செய்ய அரசு எடுத்த நடவடிக்கையென்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ரூபாய் 24,53,284.